# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2064/7 - 2018 මාර්තු මස 26 වැනි සඳුදා - 2018.03.26

*2064/7 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், றுவன்வெல்லை உத்தேச நீர் வழங்கல் திட்டத்தின் நீர் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 13,
5/2/1/1329.

**அட்டவணை**

கேகாலை மாவட்டத்தில், றுவன்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், மாஹல்ல கிராம அலுவலர் பிரிவில், மொரலிய கிராமத்தில் அமைந்துள்ள றுவன்வெல்ல வத்த என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 2 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இக்காணியின் மீதமாயுள்ள காணிப்பகுதி ; |
| கிழக்கு | : | பிரதேச சபை வீதி ; |
| தெற்கு | : | பிரதேச சபை வீதி மற்றும் இக்காணியின் மீதமாயுள்ள பகுதி ; |
| மேற்கு | : | இக்காணியின் மீதமாயுள்ள காணிப்பகுதி. |

காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : (1) பிரதம நிறைவேற்று அதிகாரி,
வரையறுக்கப்பட்ட மல்வத்த பெருந்தோட்ட நிறுவனம்,
இல. 280, டேம் வீதி,
கொழும்பு 12.



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு பத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் நீர்த்தடாகம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள காணிக்கு உட்செல்லும் பாதையை விரிவாக்குவதன் பொருட்டு காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 13,
5/2/2/1296.

**அட்டவணை**

காலி மாவட்டத்தில், பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 184A, நயாபாமுல கிராம அலுவலர் பிரிவில், பத்தேகம நயாபாமுல கிராமத்தில் அமைந்துள்ள கன்தே அத்தரவத்த என்றழைக்கப்படும் காணியை உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. ஞானசிரி தஹநாயக அவர்களினால் 2013.09.10 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் 2013/050 உடைய திட்ட வரைவில் துண்டு இலக்கம் 4ஏ என சுட்டிக்காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்திலிருந்து அண்ணளவாக 0.0025 ஹெக்டயார் (0.98 பேர்ச்சஸ்) விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : டி. ஜீ. வை. ஐ. அபேரத்ன அவர்கள் உரிமை கோருகின்ற 4 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதி ;

கிழக்கு : பத்தேகமவிலிருந்து நயாபாமுல வரையான பிரதான வீதிக்கு வேஹெரமலுவயில் இருந்து செல்லும் வீதி ;

தெற்கு : பத்தேகமவிலிருந்து நயாபாமுல வரையான பிரதான வீதிக்கு வேஹெரமலுவயில் இருந்து செல்லும் வீதி ;

மேற்கு : டி. ஜீ. வை. ஐ. அபேரத்ன அவர்கள் உரிமை கோருகின்ற 4 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதி.

காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : (1) திரு. டி. ஜீ. வை. ஐ. அபேரத்ன,
கன்தே அத்தற வத்த,
தெல்கட, பத்தேகம.

4-378

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.